# மார்ச் - 2017
# நடப்பு நிகழ்வுகள்

## முக்கியதினங்கள்

1. தபால்துறை குறைதீர்ப்பு தினம்- மார்ச் 15
2. சர்வதேச பூஜ்ஜிய பாகுபாடு தினம் - மார்ச் 1
3. சர்வதேச அரிய நோய்களின் தினம் - பிப்ரவரி 28
4. குடிமைகணக்கு தினம் - மார்ச் 1
5. உலக வனவிலங்குகள் தினம் - மார்ச் 3
6. தேசிய பாதுகாப்பு வாரம் - மார்ச் 4 முதல் 7 இதன் நோக்கம் - ஒரு வரையொருவர் பாதுபாப்பாய் வைத்திருப்போம்
7. உலக கேட்டல் தினம் - மார்ச் 3
8. உலக சிறு நீரக தினம் - மார்ச்9
9. இணையதள் கண்காணிப்பிற்கெதிரான் உலகளாவிய தினம் - மார்ச் 12 இந்நிகழ்வை உருவாக்கியவர்கள் எல்லைகளற்ற நிருபர்கள் என்ற அமைப்பு
10. உலக நுகர்வோட்உரிமைகள் தினம் - மார்ச்15
11. உலக சிட்டுக்குருவிகள் தினம் - மார்ச் 20
12. உலக காடுகள் தினம் - மார்ச் 21
13. உலக நீர் தினம் - மார்ச் 22
14. உலக காசநோய் தினம் - மார்ச் 24
15. சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20
16. உலக கவிதை தினம் - மார் 21
17. உலக மனநலிவு நோய் தினம் - மார்ச் 21
18. உலக வானிலை ஆய்வு தினம் - மார்ச் 23
19. உலக நாடகக் கொட்டகை தினம் - மார்ச் 27

## தேசிய செய்திகள்

1. **29-**வது சர்வதேச யோகா விழா:-
உத்தரகண்ட மாநிலம் ரிஷிகேஷில் அம்மாநில ஆளுநர் கே.கே.பால் தொடங்கி வைத்தார்.
2. சென்னை முகப்பேர் வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவர் வி.நந்தவர்மன் அகில இந்திய அளவிலான அறிவியல் நுட்பத்திறனறிவு தேர்வில் முதல் பரிசு பெற்றுள்ளார்

3. சரக்கு மற்றும் சேவை வரிகள் வரும் 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
4. பிப்ரவரி 28-ல் கொண்டாடப்பட்ட தேசிய அறிவியல் தினத்தின் நோக்கம் "மாற்றுத்திறன் கொண்டோர்களுக்கான அறிவியல் தொழில்நுட்பம்" என்பதாகும்.
5. ஹம்சா஼பர் எக்ஸ்பிரஸ்:-
   இரயில் சேவை இராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீகங்கா மற்றும் திருச்சி இடையே துவங்கப்பட்டுள்ளது.
6. நமாமி பிரம்மபுத்திரா என்னும் பெயரில் ஆற்றுத் திருவிழாவை கொண்டாடும் மாநிலம் - அஸ்ஸாம்
7. முழுவதும் முன்பதிவற்ற இரயிலான இந்தியாவின் முதல் "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்" - எர்ணாக்குளம் மற்றும் ஹவுரா நகரங்களிடையே துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
8. ICFR& - Indian Council of forestry Research and Education - டேராடூனில் அமைந்துள்ளது.
9. தேசிய குடும்ப நல சர்வே பாலின விகிதம் கடந்த பத்து ஆண்டுகளில் 914 லிருந்து 919 ஆக உயர்வடைந்துள்ளது. என அறிவித்துள்ளது. கேரளா 1047 எண்ணிக்கையுடன் முதலிடம் பிடித்துள்ளது.
10. தர்மசாலா - இமாச்சலபிரதேசத்தின் 2-வது தலைநகராக தர்மசாலா மாற்றப்பட உள்ளது.
11. பாதுகாப்புத் துறைக்கான தனிமங்கள் ஆராய்ச்சி சோதனைக் கூடம் அமைந்துள்ள இடம் - ஹைதராபாத்
12. இந்தியாவின் மிக உயர்ந்த கொடிக்கம்பம் - பஞ்சாபின் அமிர்தசரஸ் மாவட்டத்தில் அட்டாரி கிராமத்திலுள்ள இந்திய - பாகிஸ்தான் சர்வதேச எல்லைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 360 அடிகளாகும்.
13. மலைவாழ் மக்கள் பண்டிகையான பகோரியா நடைபெறும் மாநிலம் - மத்திய பிரதேசம்.
14. மலைவாழ் மக்கள் பேசும் மொழியான "குருக் மொழிக்கு" அலுவல் மொழி அந்தஸ்து வழங்கிய மாநிலம்
    மேற்கு வங்கம்
15. ஜகார்தா குடிமக்கள் மற்றும் மக்களாட்சி மையம் சார்பாக நடத்தப்பட்ட இந்திய நகரங்கள் வருடாந்திர கணக்கெடுப்பு 2016ந் படி சிறந்த நகர நிர்வாக தரவரிசைப் பட்டியலில் திருவனந்தபுரம் நகரம் முதலிடம் பெற்றுள்ளது.
16. அகில இந்திய ஆயுர்வேதா கல்வி நிறுவனம் அமைப்பதற்காக மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ள மாநிலம் - திரிபுரா.

17. எட்டாம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியை கட்டாயமாக்கியுள்ள மாநில அரசு - அஸ்ஸாம்
18. சர்வதேச வெளிப்படைத்தன்மை சர்வதேச ஊழல் எதிர்ப்பு குழுக்கள் நடத்திய கணக்கெடுப்பின் படி ஆசிய பசுபிக் நாடுகளில் அதிகளவு லஞ்சம் கொடுக்கும் நாடுகளில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.
19. நாட்டின் தலைசிறந்த் எம்.பி.யாக தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தனஞ்ஜெய் மஹதிக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
20. இந்திய வணிக முத்திரை விதி முறைகள் 2017,மார்ச் 6 முதல் அமலுக்கு வந்துள்ளன,
21. சமீபத்தில் நாட்டிற்கு அற்பணிக்கப்பட்டுள்ள பாகேஜ் பெட்ரோ கெமிக்கல் கட்டடம் அமைந்துள்ள மாநிலம் - குஜராத்
22. அடுத்த 5 ஆண்டுகளுக்கான இந்திய கிரிக்கெட் அணியின் ஆதரவாளராக Oppo Mobiles india Pvt ltd நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள Star India நிறுவனத்தின் கால் அளவு மார்ச் 2017 உடன் முடிவடைந்துள்ளது.
23. ICE GOV 2017:
சர்வதேச மின்னாளுமை மாநாடு மார்ச்-7,2017-ல் புது டெல்லியில் நடைபெற்றது.
24. டைம் பத்திரிக்கை வெளியிட்டுள்ள 2017 ஆம் ஆண்டின் 10 மிகச்சிறந்த சிறிய பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இந்தியாவின் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் இடம் பெற்றுள்ளது.
25. தீர்த்தா தரிசனம்:
இந்த இலவச ஆன்மீகச் சுற்றுலாவை ஹரியானா அரசு அறிமுகம் செய்துள்ளது.
26. உலக பெண்கள் தினம் 2017-ன் நோக்கம்"-
"மாற்றத்திற்காக தைரியமாக இருங்கள் மற்றும் மாறும் பணிச்சூழலில் பெண்கள் - 2030 க்குள் உலகம் முழுவதும் 50-50 சதவீதம்
27. இந்தியாவின் மிக நீளமான கம்பி நிறுத்த பாலம் பிரதமர் மோடி அவர்களால் குஜராத் மாநிலம் "ப்ரூச்" பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை-8-ல் நர்மதா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது
28. 5 முதல் 15 மில்லியன் பயணியர் பிரிவில் விமான நிலைய சேவையில், உலகிலேயே முதலிடத்தை பெற்றுள்ள இந்திய விமான நிலையம் - ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம் ஹைதராபாத்
29. இந்தியாவின் முதல் நவீன மலைவாழ் கிராமம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலுள்ள "ஹப்பி" பகுதியில் துவக்கப்பட்டுள்ளது.

30. இந்திய பெரும் கோடீஸ்வரர் பட்டியலில் முகேஷ் அம்பானிக்கு தொடர்ந்து முதலிடம்
31. 11-வது வடகிழக்கு மாநிலங்ககளுக்கான வணிக கூடுகை புது தில்லியில் நடைபெற்றது
32. தூய்மை இந்தியா திட்டத்தில் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மேம்படுத்த பெண் கிராம தலைவர்களுக்கான கூடுகை ஸ்வச் சக்தி 2017 - குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்றது
33. அரசின் சாதனைகளை காட்சிப் படுத்துவதற்காக பிரதிபிம்பா எனும் பெயரில் இணையதளத்தை கர்நாடக அரசு துவங்கியுள்ளது.
34. இந்தியா ஆசிய செய்தி சேவை நிறுவனத்தின் ஆசிரியர் அரவிந்த் பதம்நாபன் மரணமடைந்துள்ளார்
35. ஐ.நா சபையில் உலக மகளிர் தினத்தில் கவிஞர் வைரமுத்துவின் அவசர தாலாட்டு என்ற கவிதைக்கு ஐஸ்வர்யா தனுஷ் நடமனமாடினார். நிகழ்ச்சியின் நிறைவாக உலக அமைதிக்காக எம், எஸ்,சுப்புலட்சுமி பாடிய பாடலுக்கும் ஐஸ்வர்யா தனுஷ் நடனம் ஆடினார்.
36. பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் புகைப்படத்தை தங்களின் விளம்பரங்களில் பயன்படுத்தியதற்காக ரிலையன்ஸ் ஜியோ மற்றும் பேடிஎம் நிறுவனங்கள் மன்னிப்புக் கோரியுள்ளன.
37. சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மன உளைச்சலினால் மனநல ஆலோசனை வழங்குவதற்கு "181" என்ற 24 மணி நேரம் இயங்கும் கட்டணமற்ற தொலைப்பேசி என்னை ஒடிசா அறிமுகம் செய்துள்ளது
38. பீகார் மாநிலம் வைஷாலியில் புதிதாக அமையவுள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்திற்கு மத்திய விவசாய்த்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் அடிக்கல் நாட்டினார்.
39. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் பதவியிலிருந்து சஷாங்க் மனோகர் ராஜினாமா செய்துள்ளார்,
40. 6- வது சர்வதேச பொறியியல் ஆதாரங்கள் கண்காட்சி சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது,
41. கிரிஷி உன்னதி மேளா **2017:-**
விவசாயிகளுக்கான தேசிய அளவிலான கூடுகை புது தில்லியில் நடைபெற்றது
42. ஐக்கிய நாடுகளவையினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அரசியல் வரைபடத்தில் பெண்கள் 2017 எனும் பட்டியலில் இந்தியா 148 வது இடத்திலுள்ளது.
43. சர்வதேச விஷண் ஜீரோ கூடுகை 2017 புது டெல்லியில் நடைபெற உள்ளது

44. Mercer's எனும் அமைப்பு வெளியிட்டுள்ள சரவதேச தரமான வாழ்க்கைக்கான நகரங்களின் பட்டியல் 2017 - ல் ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னா முதலிடம் இந்தியாவிலிருந்து மும்பை நகரம் 141-வது இடம்
45. மத்திய அரசின் குற்றவியல் தேடுதலுக்கான வலையமைப்பில் இணைக்கப்படும் முதல் காவல் நிலையம் எனும் பெருமையை ஹிமாச்சலபிரதேசத்திலுள்ள சிம்லா நகரத்திலுள்ள சஞ்சாவுலி காவல் நிலையம் பெற்றுள்ளது
46. ஆசியாவிலேயே முதல் முறையாக விமானிகள் பயிற்சி மையத்தை ஏர்பஸ் நிறுவனம் தேசிய தலைநகர் தில்லியில் அமைக்க உள்ளது
47. இந்தியாவில் அதிக அளவில் சாலை விபத்து நடைபெறும் மாநிலமாக தமிழகம் காணப்படுவதாக தேசிய சாலை பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது
48. இந்தியாவின் மிக நீளமான குகை பாதை விரைவில் திறக்கப்பட உள்ளது. ஜம்மு - ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் செனானி-நசரி பகுதிகளை இணைக்கும் வகையில் அமைய உள்ளது
49. 21ம் நூற்றாண்டின் புத்தமதம் எனும் தலைப்பில் மூன்று நாட்கள் நடைபெற உள்ள சர்வதேச புத்த கூடுகை பீகார் மாநிலம், ராஜ்கிருகாவில் தலாய் லாமா மற்றும் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் மகேஷ் சர்மா ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது
50. சூரிய கதிர்வீச்சு தாக்கத்தில் தமிழ்கத்திலேயே மதுரைக்கு முதலிடம்
51. அனைத்து அரசு நிதியுதவி பெறும் கல்லுரிகளின் பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆதார் அடிப்படையில் பயோமெட்ரிக் முறையில் வரும் ஏபரல் - 1 ஆம் தேதி வருகைப் பதிவு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது
52. உலகிலேயே சுத்தமான குடிநீர் கிடைக்காத குடிமக்கள் அதிகம் உள்ள நாடாக இந்தியா கண்டறிப்பட்டுள்ளது என சர்வதேச ஆய்வறிக்கை தெரிவித்தது
53. சர்வதேச அளவில் செலவினம் குறைவாக உள்ள 10 நகரங்களின் பட்டியலில் சென்னை உள்ளிட்ட நான்கு இந்திய நகரங்கள் இடம் பிடித்துள்ளன.இதில் சென்னை 6-வது இடம் பிடித்துள்ளது
54. கோடீஸ்வரர்கள் அதிகம் வாழும் இந்திய நகரங்கள் பட்டியலில் இந்தியாவின் மும்பை முதலிடம் பிடித்துள்ளது.
55. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் ரவீந்திர ஜடேஜா முதலிடம்
56. விஜய் ஹசாரே டிராபி கிரிக்கெட் போட்டியில் பெங்கால் அணியை வீழ்த்தி தமிழக அணி வென்றது

57. இந்திய குத்துச்சண்டை வீரர்களுக்கான பயிற்சியாளராக ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த சாண்டியாகோ நீவா பொறுப்பேற்க உள்ளார்.
58. மை பிராண்ட் போஸ்ட்மேன்:-
தபால்காரருக்கு போன் செய்து முகவரியைக் கூறினால் வாடிக்கையாளரின் வீட்டுக்கே வந்து தபால்களை வாங்கிச் செல்லும் திட்டமாகும்
59. முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் இரயிலான மேத்தா இரயில் தனது முதல் பயணத்தை தாதர் மற்றும் போரிவாலி ஆகிய நிலையங்களுக்கிடையே 18.03.2017 துவங்கியது.
60. இந்திய வானிலை ஆய்வின் தந்தை - தேவ்ராஜ் சிக்கா மரணமடைந்தார்.
61. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஐந்து கிளை வங்கிகளான State bank of Bikaner and Jaipur,State bank of Hyderabad,State bank of mysore, State bank of Patiala மற்றும் State bank of Travancore ஆகியவற்றின் அனைத்து கிளைகளும் ஏப்ரல் 1,2017 முதல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளைகளாக இயங்கும் என மத்திய அரசு அறிவித்துள்ளது
62. அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள மஜீலி மாவட்டம் இந்தியாவின் முதல் கார்பன் சமநிலை மாவட்டம் மற்றும் பல்லுயிர் பாரம்பரிய தலமாக உருவாக உள்ளது
63. தனியார் துறையிலிருந்து இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முதல் பெண்மணி - மாதாபிபூரிபச்
64. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தினால் அமைக்கப்பட்டுள்ள உலகின் மூன்றாவது பெரிய அதிமீபொலி காற்றுச் சுரங்கம் திருவனந்தபிரத்திலுள்ளவிக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது
65. உலக வளர்ச்சி அறிக்கை 2016-ல் இந்தியா 131 வது இடம் பெற்றுள்ளது
66. ABC of Breast Health எனும் பெயரில் மார்பகப் புற்று நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலகின் முதல் மொபைல் அப்ளிகேசனை நடிகர் அமிதாப் பச்சன் வெளியிட்டுள்ளார்.
67. இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நிரந்தர இந்து நதி ஆணைய கூடுகையில் இந்திய குழுவிற்கு தலைமை தாங்கியவர் - பி.கே.சக்சேனா
68. மேரா । மொபைல்:-
கிராமப்புற மக்களுக்கான மொபைல் வங்கி செயலியை ICICI வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
69. தமிழக லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநராக ஏ.டி.ஜி.பி. எம்.என். மஞ்சு நாதா நியமிக்கப்பட்டுள்ளார்.

70. கேரள கன்னியாஸ்திரி ராணி மரியாவுக்கு அருளாளர் பட்டம் வாடிகன் நகரில் போப் பிரான்சிஸ் வழங்க உள்ளார்.
71. சர்வதேச கால்பந்து அமைப்பான FIFA வின் விதிமுறைகளின் படி உலகத்தரம் வாய்ந்த கால்பந்து விளையாட்டுத் திடலாக ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பாக்ஷி விளையாட்டுத்திடல் மாற்றப்பட உள்ளது
72. சிக்கிம் சட்டமன்றத்தில் கூடுதலாக ஐந்து இடங்களை மலைவாழ் இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்வதற்கான கருத்துருவை தேசிய மலைவாழ் மக்களுக்கான கமிஷன் ஒத்துக் கொண்டது
73. உலக ஆற்றல் கட்டமைப்பு செயல்திறன் பட்டியல் 2017-ல் இந்தியா 87-வது இடம் பிடித்துள்ளது
74. 6-வது தேசிய புகைப்பட விருதுகள் வழங்கும் நிகழ்வில் புகழ்பெற்ற இந்திய புகைப்பட கலைஞர் ரகுராய் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது. வழங்கப்பட்டது,
75. இந்திய வெண்மை புரட்சியின் 50வது ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு 50-Years the Great Indian Milk Revolution - என்ற புத்தகத்தை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் துறை அமைச்சர் ஸ்ரீ ராதா மோகன் சிங்க வெளியிட்டுள்ளார்.
76. மார்ச் 22 - பீகார் மாநில தினத்தை முன்னிட்டு அம்மாநிலத்திலுள்ள அனைத்து கல்லுரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டம் அம்மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
77. இந்தியாவின் முதல் செங்குத்து தோட்டம் பெங்களூருவில் ஒசூர் சாலை மேம்பாலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
78. 5-வது தேசிய சமஸ்கிருத விழா 2017 அருணாச்சல பிரதேச மாநிலத்தின் தவாங் நகரில் நடைபெற்றது.
79. "டைக்கோனா நெட்வொர்க் இணையதள மற்றும் மொபைல் நெட்வொர்க் நிறுவனத்தின் 4G மற்றும் கம்பியற்ற அகன்றவலை சேவை ஆகியவற்றை ஏர்டெல் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது.
80. குறைந்த தொலைவு நிலத்திலிருந்து வான் எல்லையைத் தாக்கக் கூடிய பராக் ஏவுகணையின் முதல் சோதனை இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். விகிராந்த் கப்பலிருந்து வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
81. இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் மூன்று புதிய தொழில் நுட்பங்களை இந்திய கடற்படையில் அறிமுகப்படுத்தியுள்ளது.அவை
    1. இரகசிய தகவல் தொடர்பு தொலைபேசி
    2. அடுத்த தலைமுறை ரேடார் தொழிநுட்பம்
    3. USHUS-II எனப்படும் நீர்மூழ்கிக் கப்பல்களில் பயன்படுத்தப்படும் சோனார் கருவி.

82. இந்தியா உலகநாடுகளில் உள் நாட்டு விமானப் பயணிகளைப் பொறுத்த வரையில் மூன்றாவது பெரிய விமானப் போக்குவரத்து சந்தையைக் கொண்டுள்ளது
83. ஜெனரல் **D.B** ஷேகாத்தர் குழு:-
இராணுவத்தின் முப்படைகளுக்குமிடையேயான ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் இராணுவ நிதி மேலாண்மையை மேம்படுத்தல்
84. தனது மாநிலத்திலுள்ள கிராமப்புறங்களிலும் வங்கி சேவைகளை நிறுவியுள்ள காரணத்தால் இந்தியாவின் முதல் உள்ளடக்கிய பொருளாதாரத்தை அடைந்துள்ள மாநிலம் - ஒடிஷா
85. உத்திரபிரதேசம் -அம்மாநிலத்தில் நகர மற்றும் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க உள்ளது.
86. 105-வது இந்திய அறிவியல் காங்கிரஸ்:-
87. ஜனவரி 2018-ல் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்திலுள்ள ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.
88. புதுதில்லியிலுள்ள அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் இயக்குநராக ரண்தீப் குலேரியா நியமிக்கப்பட்டுள்ளார்.
89. நாட்டில் இனிமேல் வாகனங்கள் வெளிவிடும் புகையை கட்டுப்படுத்தும் வகையில் புகைக்காத பி.எஸ-4 வாகனங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் பி.எஸ்-3 தொழில் நுட்பத்தைக் கொண்ட வாகனங்கள் விற்பனைக்கு உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது
90. நமாமி பிரம்மபுத்திரா திருவிழா:-
அசாம் மாநிலம் குவாஹட்டியில் நமாமி பிரம்மபுத்திரா திருவிழாவை குடியரசுத்தலைவர் தொடங்கி வைத்தார்.
91. உலக சுகாதார நிறுவனத்தின் சார்பில் சர்வதேச மருத்துவ மாநாடு புதுதில்லியில் ஏபரல் 6,7 ல் நடைபெற உள்ளது.
92. உலகளவில் உள்ள மெட்ரோ அமைப்புகளில் அதிகளவு பயணிக்கும் மெட்ரோக்கள் பட்டியலில் தில்லி மெட்ரோ 10-வது இடம் பிடித்துள்ளது.
93. வறட்சி நிவாரண நிதியாக இலங்கைக்கு 100டன் அரிசி வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது
94. நேட்டோ (North Atlantic Treaty Organication) அமைப்பின் 29- வது உறுப்பினராக அமெரிக்க செனட் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாடு மாண்டி நீக்ரோ.
95. உன்னதி கிரடிட்கார்டு - அனைவருக்கும் கடன் அட்டை பயன்பாடு சென்றடையும் வகையில் அறிமுகம் செய்துள்ள வங்கி -ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா.

96. 2016ம் ஆண்டின் சிறந்த சிறிய வங்கியாக தேர்வு செய்யப்பட்டுள்ள வங்கி கரூர் வைஷ்யா வங்கி.
97. சார்குல் இயற்கை வழிபாட்டை மையமாகக் கொண்ட மலைவாழ் இன மக்களின் திருவிழா நடைபெறும் மாநிலம் - ஜார்க்கண்ட்.
98. BRICS நாடுகளுக்கான புதிய வளர்ச்சி வங்கியின் இரண்டாவது தேசிய கூடுகை மார்ச்-31 புதுதில்லியில் நடைபெற்றது. இந்த வங்கியின் தலைவர் - KV காமத் என்ற இந்தியர் ஆவார்.
99. பாராளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றிய அமைப்பின் 136- வது கூடுகை வங்காளதேசத்தின் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது.
100. உலோக சுரங்கங்களுக்கு முற்றிலுமாக தடைவிதித்திள்ள நாடு எல்ஸ்டார்.
101. தமிழ் நாட்டின் முதல் பணமற்ற கிராமம் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கண்டலவாடி கிராமம் ஆகும்.
இந்த கிராமத்தை மாற்ற உதவியது பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கி.
102. இந்தியாவின் முதல் பணமற்ற கிராமம் என்ற பெருமையை மஹாராஷ்டிராவின் தானேவிலுள்ள தாஸை
பெற்றுள்ளது
103. தென்னிந்தியாவின் முதல் பணமற்ற கிராமம் தெலுங்கானாவிலுள்ள இப்ராகிம்பூர் கிராமம் ஆகும்
104. இந்தியாவின் முதல் டிஜிட்டல் கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள அகோதரா கிராமம் ஆகும்

## நியமனங்கள்

1. இந்திய மகளிர் ஹாக்கி அணிக்கான தலைமை பயிற்சியாளராக நெதர்லாந்தை சார்ந்த ஜோயர்ட் மரைன் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. பார்வைக்குறைபாடு பற்றிய விழிப்புணர்விற்காக் சேவை புரியும் "Sightsavers" எனப்படும் சர்வதேச அரசு சார நிறுவனத்தின் நல்லெண்ணத் தூதுவராக இந்திய நடிகர் "கபீர் பேடி" நியமிக்கப்பட்டுள்ளார்.
3. ஹைதராபாத்தில் அமைந்துள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய போலீஸ் அகதெமியின் இயக்குநராக DR டோலீவர்மன் நியமிக்கப்பட்டுள்ளார்.
4. தேசிய மலைவாழ் இனத்தவர்களுக்கான குழுவின் தலைவராக் சட்டிஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த நந்தக்குமார் சாய் நியமிக்கப்பட்டுள்ளார்.
5. "டோகோ குடியரசு" நாட்டிற்கான இந்தியாவின் தூதுவராக விரேந்தர் சிங் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்

6. ஐ.நா.வின் அகதிகள் அமைப்பின் நல்லெண்ண தூதுவராக புகழ்பெற்ற எழுத்தாளர் நீல்ஹைமான் நியமிக்கப்பட்டுள்ளார்
7. உலக வர்த்தக அமைப்பிற்கான இந்தியாவின் அடுத்த தூதுவராக JS தீபக் நியமிக்கப்பட உள்ளார்.
8. தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
9. MTNL Mahanagar Telephone Nigam Limited தொலைப்பேசி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக pk புர்வார் நியமிக்கப்பட்டுள்ளார்.
10. தமிழக உளதுறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளவர் நிரஞ்சன் மார்டி
11. உச்ச நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை ஒழிப்பதற்கான சிறப்பு புலனாய்வு குழுவின் துணைத்தலைவர் - அரிஜித் பாஷயாத்
12. ஐ.பி.எல் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கேப்டனாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மேக்ஸ்வெல் நியமிக்கப்பட்டுள்ளார்.
13. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பகவத் அவர்களுக்கு மகாராஷ்டிரா விலங்கு மற்றும் மீன் அறிவியல் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியுள்ளது.
14. சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தின் 80- வது கமாண்டன்டாக லெப்டினென்ட் ஜெனரல் ராஜன் ரவீந்திரன் பொறுப்பேற்றார்.
15. Chinese Super League கால்பந்து போட்டிக்கான விளம்பர தூதுவராக அர்ஜெண்டினாவின் கால்பந்து வீரர் மாரடோனா நியமிக்கப்ப்ட்டுள்ளார்.
16. யுனி செஃப் மற்றும் நன்மைக்கான கிரிக்கெட் எனும் அமைப்புகளுக்கான 2017 ஆம் ஆண்டின் பெண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பைக்கான நல்லெண்ண தூதுவராக சச்சின் டெண்டுல்கரை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நியமித்துள்ளது.
17. மத்திய நீர்க்கமிஷனின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் நரேந்திரகுமார்
18. ரிசர்வ் வங்கியின் துணை ஆளுராக பி.வி.கனுங்கோ நியமிக்கப்பட்டுள்ளார்.
19. நேபாள நாட்டிற்கான இந்தியாவின் தூதுவராக மஞ்சீவ் சிங் பூரி நியமிக்கப்பட்டுள்ளார்.
20. மணிப்பூர் மாநில முதல்வராக பாஜக கட்சியைச் சேர்ந்த நாங்தோம்பம் பிரேன் சிங் பதவியேற்க உள்ளார்.
21. மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியம்

22. 4- வது முறையாக கோவா முதல் ம்ந்திரியாக் மனோகர் பாரிக்கர் 15.03.2017 பதவி ஏற்கிறார்
23. அமெரிக்க அரசின் மருத்துவ சுகாதாரத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவின் தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீமா வர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.
24. பஞ்சாபின் முதல்வராக காங்கிரசின் அம்ரீத்சிங்க் பதவியேற்றுள்ளார்.
25. இந்திய பத்திரிக்கை கவுன்சில் தலைவராக நீதிபதி சி.கே.பிரசாத் உள்ளார்.
26. உத்திரப் பிரதேச மாநில முதலவராக பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ஆதித்ய நாத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.இவர் இதற்கு முன் உத்திரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் தொகுதி மக்களவை உறுப்பினராக் இருந்தார்.
27. உத்ரகாண்ட் மாநிலத்தின் 8-வது முதல் மந்திரியாக பா.ஜ.கவின் திரிவேந்திர சிங்கராவத் பதவியேற்றார்.
28. ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலுக்கான தேர்தல் அதிகாரியாக பிரவீன் பி.நாயர் நியமனன் செய்யப்பட்டுள்ளார்.
29. இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள பேட்மிண்டன் விளையாட்டு வீரர் ஜீவாலா கட்டா
30. 2018 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான விளம்பர தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பவர் சாஹித் அப்ஃரிடி
31. பி.எஸ்.எஃப் தாக்குதல் பிரிவின் முதல் பெண் அதிகாரியாக இராஜஸ்தானைச் சேர்ந்த தனுஸ்ரீ தேர்வு செய்யப்பட்டுள்ளார்,
32. இந்திய விலங்குகள் நலவாரியத்தின் தலைவராக சரத்சிங் நேகி நியமிக்கப்பட்டுள்ளார்.
33. அட்லாண்டிக் கவுன்சில் அமைப்பின் சர்வதேச ஆலோசனை வாரியத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட இந்தியர் - அனில் அம்பானி
34. ஐக்கிய நாடுகளவையின் உலக உணவு திட்டத்தின் செயல் இயக்குநராக அமெரிக்காவின் டேவிட் மீஸ்லே நியமிக்கப்பட்டுள்ளார்.

## அறிவியல் (ம) தொழில்நுட்பம்

1. சூப்பர் சோனிக் இன்டர் செப்டர்:-

   எதிரி நாட்டு ஏவுகணையை நடுவானிலேயே மறித்து தகர்க்கவல்ல ஏவுகணையை இந்தியா 2- வது முறையாக சோதித்துள்ளது. பிருத்வி ஏவுகணையின் தாக்குதலை சூப்பர் சோனிக் இன்டர் செப்டர் இடைமறித்து தகர்த்தது.

2. நாட்டின் புவிசார் குறியீடு உரிமம் வழக்குகளை விசாரிக்கும் அறிவுசார் சொத்துரிமை மேல்முறையீட்டு வாரியம் www.ipabindia.org என்ற இணையதளமும் IPAB என்ற மொபைல் அப்ளிகேஷன் ஐயும் துவங்கியுள்ளது.
3. டெங்கு நோயை தடுக்கும் உல்ஃபாசியா எனும் பாக்டீரியாவை புதுச்சேரியிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் மோனாஸ் பல்கலைக் கழகம் இணைந்து கண்டுபிடித்துள்ளனர்
4. உலகின் வயதான விமானம் தாங்கி கப்பலான இந்தியாவின் ஐ.என்.எஸ் விராட் ஒய்வடைந்துள்ளது. ஆந்திர மாநில அரசு விராட் கப்பலை வாங்கி விசாகப்பட்டினத்தில் மியூசியத்தில் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது
5. கனகாம்பரம், சவுக்கு மரம் சாகுபடியில் புதிய ரகங்களையும், நவீன தொழில்நுட்ப உத்திகளையும் உருவாக்கிய புதுச்சேரியைச் சார்ந்த விவசாயி டி.வெங்கடபதி ரெட்டியாருக்கு தேசிய விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார்.
6. இந்திய இராணுவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள "ஸ்வாதி" என்று ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார் கருவி இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது
7. இந்தியாவில் முதல் முறையாக ஈ.வா எனும் பெயரில் செயற்கை நுண்ணறிவு முறையில் இயங்கும் முதல் சாட்பாட் எனப்படும் அரட்டை ரோபோவை அறிமுகப்படுத்திய வங்கி -எச்.டி.எஃப்சி
8. சந்திரனைக் குறித்து ஆராய அனுப்பப்பட்டு விண்வெளியில் தொலைந்துபோன இந்தியாவின் சந்திராயன் -1 விண்கலத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம் நாசா கண்டறிந்துள்ளது.
9. செண்டினல் - 2பி என்ற பெயரில் செயற்கைக்கோளை ஐரோப்பிய யூனியன் வெற்றிகரமாக செலுத்தியது.
10. பிரம்மோஸ் ஏவுகணை:-
ஒலியைவிட வேகமாக பாயக்கூடிய பிரம்மோஸ் ஏவுகணை ஒடிஸாவின் பாலாசோர் சோதனைத் தளத்தில் 11.03.2017 அன்று வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது
11. 2017-18-ஆம் ஆண்டின் இறுதிக்குள் 4G சேகையை அறிமுகப்படுத்த பி.எஸ்.என்.எல் திட்டமிட்டுள்ளது
12. தேசிய அனல்மின் ஆற்றல் நிறுவனம் இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்னாற்றல் உற்பத்தி நிலையத்தை கேரளாவிலுள்ள காயம்குளம் எனும் பகுதியில் நிறுவியுள்ளது.

13. உலகிலேயே முதல் முறையாக ஒளிரும் தன்மையுடைய தவளை அர்ஜெண்டினாவின் சாந்தா:.பீ என்னும்மிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

1. உலக ஒயின் சந்தையில் தொடர்ந்து தனது முதலிடத்தை தக்க் வைத்திருக்கும் நாடு-அமெரிக்கா
2. மேற்கிந்தியத் தீவுகள் வீரர் டுவைன் ஸ்மித சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஒய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
3. சூடான் நாட்டின் பிரதமராக "ஹாசன் சாலே" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
4. சார்க் அமைப்பின் புதிய செக்ரடரி ஜெனரலாக பாகிஸ்தானைச் சேர்ந்த அஜ்மத் ஹீசைன் பிசியால்" நியமிக்கப்பட்டுள்ளார்.
5. சீனாவில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா மற்றும் பயணக் கண்காட்சியில் மிகச்சிறந்த சுற்றுலா தலத்திற்கான விருது. ஸ்ரீலங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
6. ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்தினால் உயர்மட்ட விசாரணை அமைப்பதர்காக பரிந்துரைக்கப்பட்ட நாடு - மியான்மர்.
7. ஈரானின் டெக்ரான் நகரில் நடைபெற்ற பெண்களுக்கான உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிகா துரோணவல்லி வெண்கலப்பதக்கம் வென்றார்.
8. தென்சீன கடற்பகுதியில் தேசிய கடலுக்கடயிலான உயிரிகள் கண்காட்சியை அமைக்க உள்ள நாடு - சீனா
9. மலேசியா நாட்டு குடிமக்கள் வடகொரியாவிற்குள் நுழைவதர்கு வடகொரியா அரசு தடை வித்துள்ளது
10. உலகின் மிகப்பெரிய வங்கி முறை கொண்ட நாடாக சீனா உள்ளது.இதற்கு முன் ஐரோப்பியா யூனியனின் யூரோசோன் இருந்தது.
11. ஹார்மஸ் **21:-** கடற்படையில் பயனபடுத்தப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துள்ள நாடு - ஈரான்
12. Laser Inferometer Gravitational Wane Observatory புவியீர்ப்பு அலைகளைப்பற்றி நுண்ணாயவு அமைப்பை துவங்கியவர்களில் ஒருவரான இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரொனால்டு டிரீவர் மரணமடைந்துள்ளார்.
13. வேதியியலில் நோபல் பரிசு பெற்ற ஹங்கேரிய-அமெரிக்க விஞ்ஞானி ஜார்ஜ் A.ஒலா மரணமடைந்துள்ளார்
14. பாகிஸ்தான் கடற்படையைச் சேர்ந்த இரு போர்க்கப்பல்கள் இலங்கைக்கு "நல்லெண்ணப் பயணம்" மேற்கொண்டன. பி.என்,எஸ் நாசர்,பி.என்.எஸ், சயீ:.ப் ஆகியவை போர்க்கப்பல்கள் ஆகும்.

15. பாகிஸ்தான் சூப்பர் லீக் கிரிக்கெட் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு முகவருடன் தொடர்பில் இருந்ததாக புகார் எழுந்ததை அடுத்து முகமது இர்ஃபான் போட்டிகளில் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
16. மார்ச் 13- தேசிய யானைகள் தினமாக கொண்டாடும் நாடு- தாய்லாந்து.
17. காமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூடுகை 2018 நடைபெற உள்ள நாடு - இங்கிலாந்து
18. G-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூடுகை ஜெர்மனியின் பேடந்பேடன் (Baden baden). G20 உச்சி மாநாடு 2017 - ஹேம்பர்க் (Hamburg) நகரில் நடைபெற்றது.
19. அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணம் மார்ச் 16 ஆம் தேதியை இந்திய அமெரிக்கர்களை அங்கீகரிக்கும் தினமாக அறிவித்துள்ளது.
20. டைம்ஸ் உயர்கல்வி அமைப்பின் ஆசிய பல்கலைக்கழகங்களின் தரவரிசை 2017-ல் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் முதலிடம் பிடித்துள்ளது.
21. ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் - செயித்ராத் அல் ஹீசைன்
22. மக்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதில் அக்கறை செலுத்தியதில் 4-வது இடத்தில் இருந்த நார்வே முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது.
23. சர்வதேச அளவில் அதிக செலவினம் ஏற்படுத்தும் நகரமாக சிங்கப்பூர் உருவாகி உள்ளது.
24. உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் பில்கேட்ஸ் தொடர்ந்து 4- வது முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.
25. ஐக்கிய நாடுகளவையின் நுண்ணுயிர் எதிர்ப்பு குழுவின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தியர்-சௌமியா - சுவாமிநாதன்
26. இன்ஃப்ரா ரெட் அலைகளைப் பயனபடுத்தி தர்போது நடைமுறையிலிருக்கும் வயர்லெஸ் கட்டமைப்பை விட 100 மடங்கு அதிவேக வயர்லெஸ் நெட்வொர்க் முறையை நெதர்லாந்து நாட்டின் அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்
27. உலக மகிழ்ச்சி அறிக்கை 2017-ல் இடம் பெறாத ஒரே சார்க் (SAARC) அமைப்பின் உறுப்பினர் நாடு- மாலத்தீவு
28. சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் முழு நேர இடைக்கால பொது இயக்குநராக இந்தியாவின் உபேந்திர திரிபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.
29. ஃபுளூம்பெர்க் உலக ஆரோக்கிய பட்டியலில் 2017ல் முதலிடம் பெற்ற நாடு -இத்தாலி

30. கணிதத்திற்காக வழங்கப்படும் உலகின் மிகப்பெரிய விருதான ஏபல் பரிசு 2017 பிரஞ்சு கணிதவியலாளர் யூவெஸ் மேயர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
31. பாகிஸ்தான் நாட்டின் குடியரசுத்தின விழா அல்லது தீர்மான நாள் விழா மார்ச் 23 அன்று கொண்டாடப்பட்டது.
32. ஆஸ்திரேலியாவை "டெப்பீ புயல்" என்ற பயங்கர புயல் தாக்கியுள்ளது
33. சட்ட விரோதமாக பறக்கும் டிரோன்களை ரேடியோ சிக்னல் மூலம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தரையிறக்கம் செய்யும் அதிநவீன துப்பாக்கிகளை சீனா கண்டுபிடித்துள்ளது
34. ஐ.நா அமைதிப் படைத்தலைவர் - ஹெர்வ் லாட்ஸோயஸ்
35. சீனாவில் பெய்ஜிங்கில் ஒட்டு நரில்லா சுரங்க ரயில் நடப்பு ஆண்டில் அறிமுகம் செய்யப்பட உள்ளது இதன் நீளம் 16.6 கி.மீ ஆகும்
36. 2017 ஆடவர் உலக ஹாக்கி லீக் பைனல் 2018 ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி ஆகியவை ஒடிசா தலைநகர் புவனேசுவரத்தில் நடைபெறுகின்றன.
37. உலகின் மிகப்பெரிய செயற்கை சூரியனை உருவாக்கியுள்ள நாடு - ஜெர்மனி
38. மெல்பர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய கிராண்ட்பிரிக்ஸ் ஃபார்முலா 1 போட்டியில் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த செபாஸ்டியன் விட்டல் வெற்றி பெற்றார்
39. வியட்நாம் ஓபன் சர்வதேஷ பேட்மிண்டன் 2017 போட்டியில் இந்தியாவின் சத்விக் கிராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராஜ் ஷெடி இணை வெற்றி பெற்றது
40. 2022 வரை இந்தியாவிடமிருந்து பெட்ரோல் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் நேபாள நாட்டுடன் செய்யப்பட்டது.
41. சமீபத்தில் ஆஸ்திரியாவில் நடந்து முடிந்த சிறப்பு ஒலிம்பிக் குளிர்கால போட்டிகளில் இந்தியா 37 தங்கம், 10 வெள்ளி. 26 வெண்கலம் வென்றுள்ளது
42. Leadership Conference on Civil and Human Rights அமெரிக்காவை மையமாகக் கொண்டு செயல்படும் மனித உரிமை அமைப்பின் முதல் பெண் தலைவராக இந்திய அமெரிக்க பெண்மணி வாணி குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஒப்பந்தங்கள் திட்டங்கள் மற்றும் குழுக்கள்:

1. ஹமாரி தாரோஹர் திட்டம்: மத்திய சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தினால் துவங்கப்பட்டது. இதன் நோக்கம், சிறுபான்மையின் மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பதாகும்.
2. மீனா ஹேமச்சந்திரா குழு: ரிசர்வ் வங்கியினால் அமைக்கப்பட்டுள்ள சைபர் பாதுகாப்பிற்கான பல்துறை குழு
3. இந்தியப் பெருங்கடல் நாடுகளுக்கிடையேயான கடல்வழி உறவுகள் ஒத்துழைப்புத் தொடர்பான Indian Ocean Rim Association கூடுகையானது இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்றது.
4. கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுக்கும் நோக்கில் "Smart mosquito Density" எனும் திட்டம் தொடங்கப்பட்ட இடம் -ஆந்திரபிரதேசம்.
5. ஸ்வச் சக்தி சப்தா:- தூய்மை இந்தியா திட்டத்தில் பெண்களின் பங்ககளிப்பின் முக்கியத்துவத்தை உறுதி செய்ய ஹரியானாவிலுள்ள குருகிராம் பகுதியில் நரேந்திர சிங் தோமர் துவக்கி வைத்தார்.
6. அல்நாகா- 2 இந்திய ஓமன் நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப்பயிற்சி
7. மிஷன் ஃபிங்கர்லீங்:- இந்தியாவில் நீலப்புரட்சியை அடைய தொடங்கப்பட்ட திட்டம். இதன் நோக்கம் நாட்டிலுள்ள மீன் வளத்துறையை மேம்படுத்தி அதிகளவு கடர்சார்ப் பொருட்களின் உற்பத்தியை எட்டுவதாகும்
8. இந்தியாவின் முதல் முழுவதும் குளிரூட்டப்பட்ட இரயில் ஆம்புலன்ஸ் சேவை மஹாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்திலுள்ள Kaylan என்னுமிடத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
9. கால்டேக்சியில் பயணிக்கும் பயணியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் "நிகழ்நேர அடையாள சோதனை எனும் புதுமையான முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்திய நிறுவனம்- உபேர்(Uber)
10. மதூகர் குப்தா குழு:- எல்லைகளின்ன் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டதாகும்.
11. ஜெர்மனியின் வோல்க்ஸ்வேகன் வாகன உற்பத்தி நிறுவனம் இந்தியாவின் டாடா மோட்டார்ஸ் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
12. ஜப்பானிய பொருட்களை இந்தியாவில் விற்பனை செய்வதற்காக ஜப்பானின் வெளிநாட்டு வணிக அமைப்புடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள இந்திய இணையதள் விற்பனை நிறுவனம் - ஸ்னாப்டீல் (Snapdeal)

13. ஆதர்ஸ் கிராம் யோஜனா:- அருணாச்சல பிரதேச் அரசினால் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தின் நோக்கம் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு மர்றும் பிறவசதிகளை ஏற்படுத்துவதாகும்
14. பகத்சிங் கோஷ்யாரி குழு:- பி.எஸ்.என்.எல் மற்றும் எம்.டி.என்.எல் இரண்டையும் இணைப்பதற்காக பரிந்துரைத்த குழு
15. இங்கிலாந்தைச் சேர்ந்த வோடஃபோன் நிறுவனமும் ஆதித்யா பிர்லா குழுமத்தைச் சேர்ந்த ஐடியா செல்லுலர் நெட்வொர்க்கும் இணைந்து செயல்பட ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.
16. சுயநிதி பள்ளிகளுக்கான கட்டண நிர்ணய கமிட்டி தலைவராக ஒய்வு பெற்ற நீதிபதி மாசிலாமணி நியமிக்கப்பட்டுள்ளார்.
17. இந்தியா S4-30 MKI ரக போர் விமானங்கள் வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் ரஷ்ய நாட்டுடன் செய்து கொண்டது
18. ராஷ்டிரியர் வயோஸ்ரீ யோஜனா:- வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள உடல் ஊனமுற்ற மூத்த குடிமக்களுக்கு தேவையான உதவி கருவிகள் வழங்கும் திட்டம் ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் ஏபரல் 1 2017ல் துவக்கபட உள்ளது.

## விருதுகள்

1. BCCI CK நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது:-
   முன்னாள் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் வீராங்கனை சாந்தா ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவ்விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் பெண் இவர்
2. லிம்கா சாதனை:
   மெட்ரோ வழித்தடம் அமைக்கும் பணியில் ஒரே மாதத்தில் 'யு' வடிவிலான 200 காரிடார்களை நிறுவியதில் ஒரே மாதத்தில் அதிக எண்ணிகையிலான யு கர்டர்களை நிருவிய நிறுவனமாக டி.எம்.ஆர்.சி லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
3. மத்திய அரசின் சிறந்த பலகலைக் கழக விருது 2017ஐ வென்ற பல்கலைக்கழகம் - ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்
4. ஹார்வர்டு பவுண்டேசனின் 2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைஞர் விருது ஆஸ்கார் 2017-ல் சிறந்த பெண் துணைக் கதாபாத்திர விருது பெற்ற வயலா டேவிஸ் வழங்கப்படுகிறது.
5. பாரதீய ஜனபீடம் வழங்கும் வருடாந்திர இலக்கிய விருதான "மூர்த்தி தேவி விருது 2016" மலையாள எழுத்தாளர் MP நரேந்திர குமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
6. "சரஸ்வதி சம்மன் விருது 2016:-

ஹாவ்தான் என்ற நாவலுக்காக கோவாவைச் சார்ந்த மராத்தி மற்றும் கொங்கணி எழுத்தாளர் மஹாபலேஷ்வர் சாயில் என்பவருக்கு வழங்கப்பட்டது.

7. Institute of Electrical and Electronics Ecgineers அமைப்பு வழங்கும் IEEE Spectrum சமூக சேவைக்கான தொழில் நுட்பத்திற்கான விருது ஐ.ஐ.டி சென்னைக்கு வழங்கப்பட்டது.
8. திருநங்கையினருக்கான சர்வதேச அழகிப்போட்டி 2016 தாய்லாந்தின் இராட்சயா சிரிமொங்கொல்னாவின் சர்வதேச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
9. இந்திராணி தாஸ் எனும் இந்திய அமெரிக்க சிறுமி Regeneration Science Talent Search எனும் அமெரிக்காவின் உயரிய விருதைப் பெற்றுள்ளார்.
10. இளம் பருவத்தினரின் தற்கொலை விகிதத்தைக் குறைத்ததற்காக "உலக் ஆசிரியர் பரிசு 2017" விருது கனடா நாட்டு ஆசிரியர் மேகி மேக் டொனால் எனபவருக்கு வழங்கப்பட்டது.
11. குல்தீப் நாயர் ஊடக விருது 2017:
    என்டிடிவி தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரியும் ரவிஷ்குமார் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.
12. ஐ.சி.சி. 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான கார்பீல்டு சோ.:.பர்ஸ் டிராபி விருது இந்திய வீரர் ரவீச்சந்திரன் அஸ்வினுக்கு வழங்கப்பட்டது.

## புத்தகங்கள்:-

1. "The Wrong Turn:Lone and Betrayal in the time of Netaji என்ற புத்தகத்தின் ஆசிரியர்- நமீதா ராய் கோஷ்
2. When Crime pays - Money and messcle in Indian Politics என்ற புத்தகத்தின் ஆசிரியர் - மிலான் வைஷ்ணவ்
3. "Portraits of Courage : A Commander in Chief's Tribute to America's Warriors எனப்படும் புத்தகத்தின் ஆசிரியர் - ஜார்ஜ் புஷ்
4. "Mr and Mrs Jinnah: The Marriage that shook India" - ஷீலா
5. "The Rise of Sivagams : Book 1 of Baahutali before the beginning - ஆனந்த் நீலகண்டன்
6. Numbers Do Lie: 61 hidden cricket Stories: ஆகாஷ் சோப்ரா
7. The secret Diary of kasturba - நீலிமா டால்மியா ஆதார்.
8. Age of Anger - A history of the Present" - பங்கஜ் மிஷ்ரா
9. "Aurangzeb : the man and the Myth" - ஆட்ரே டிரஸ்கே
10. When Breath becomes Air - பால் கலாநிதி
11. So you want to know about the Environment பிஜால் வச்சரஜனி

12. The Sleepwalker's Dream : Anovel" - துருபஜிஜோதி போரா
13. "Indica : A Deep Natural History of the Indian Subconrinent - பிரானே லால்
14. அறிவியலுக்கு அப்பால்- நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன்
15. Indian Railway - The weaving of national tapesty பிபேக் தேபுராய் (Bibak Debroy)

## பொருளாதாரம்

1. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு 2017 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 7% மாக இருக்கும் என கணித்துள்ளது.
2. ஃபிட்ச் உலக தரநிலை நிறுவனத்தின் கணிப்பின் படி இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2017-2018 நிதியாண்டில் 7.1% இருக்கும் என கணித்துள்ளது.

## விளையாட்டு

1. உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடுதலில் ஆடவர் 50மீ பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ஜிது ராய் தங்கமும் அமன்பிரீத்சிங் வெள்ளியும் வென்றனர்.
2. பாலி உம்ரிகர் விருது (ம) திலீப் சர்தேசாய் விருது பிசிஜ (BCCI) சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படும். பாலி உம்ரிகர் விருது அஸ்வினுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அஸ்வின் இவ்விருதை இரண்டாவது முறையாக பெறும் முதல் வீரர்.
3. துபாய் ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான பிரிட்டனின் ஆண்டி முர்ரே சாம்பியன் பட்டம் வென்றார். இது இவருடைய 45- வது பட்டமாகும்.
4. மெக்ஸிகோவின் அகாபுல்கோ நகரில் நடைபெற்ற மெக்ஸிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் சாம் கியூரே சாம்பியன் பட்டம் வென்றார்.
5. உள்நாட்டு சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் மாநிலமாக தமிழகம் தொடர்ந்து 3 வது முறையாக முதலிடம் பிடித்துள்ளது
6. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் தேசிய அளவில் நடைபெற்ற பல்கலைக்கழக மகளிருக்கான கால்பந்து போட்டியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக அணி சாம்பியன் ஆனது
7. தமிழ் பல்கலைக்கழக கண்காணிப்பாளர் பி.ஜம்புலிங்கம் விக்கிப்பீடியா நடத்திய விக்கிக் கோப்பை போட்டியில் மூன்றாம் இடம் பிடித்துள்ளார்.
8. பிரேசில் ஓபன் டென்னிஸ் **2017:**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு - உருகுவே நாட்டின் பாப்லோ காவாஸ் வெற்றி பெற்றுள்ளார்

ஆண்கள் இரட்டையர் பிரிவு: ரோஜோரியோ துத்ரா மற்றும் ஆண்டிரியா ஷா வெற்றி பெற்றுள்ளார்.

9. 7 மாதங்களுக்கு முன்னர் சர்வதேச ஹாக்கிப் போட்டியிலிருந்து ஒய்வு பெற்ற இந்திய வீராங்கனை ரீது ராணி மீண்டும் இந்திய அணிக்குத் திரும்பியுள்ளார்.
10. அஸ்ஸாம் மாநிலம் கௌகாத்தியில் நடைபெற்ற தேசிய அளவிலான துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தமிழ்கத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி அஸ்வின் கோட்னிஸ் வெள்ளிப் பதக்கம் வென்றார்
11. 22-வது ஆசிய தடகள சாம்பியன்சிப் போட்டிகள் ஜீலை 2017-ல் ஒடிசா மாநிலத்தில் நடைபெற உள்ளது
12. ஆல் இங்கிலாந்து ஒபன்":-
பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் மலேசியாவின் லீ சோங் வெய் வெற்றி பெற்றுள்ளார்.
13. 71-வது சந்தோஷ் டிராபி கால்பந்து போட்டி 2017-ல் பஞ்சாப் அணி வெற்றி பெற்றுள்ளது.
14. சர்வதேச மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப் போட்டியில் இந்தியாவிற்கு 3 தங்கம் உட்பட 8 பதக்கங்கள் கிடைத்துள்ளன. தங்கம் வென்றவர்கள்:-
    - ஈட்டி எறிதல் (எ:ப் -44) - நரேந்தர் ரன்பீர்
    - ஈட்டி எறிதல் - சுந்தர் சிங் குர்ஜர்
    - வட்டு எறிதல் - சுந்தர் சிங் குர்ஜர்
    - ஓட்டம் (400 மீ) - ஆனந்தன் குணசேகரன் -வெள்ளி
    - - பிரமோத் கே யாதவ் - வெண்கலம்
    - ஓட்டம் (800 மீ) - ராம்கரன் சிங் -வெண்கலம்
    - குண்டு எறிதல் - சுர்ஜித் சிங் - வெண்கலம்
    - ஓட்டம் (400 மீ,டி-11/12/13) ரோஹித் - வெண்கலம்
15. ஏ.டி.பி இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் 2017 டென்னிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்றுள்ளார்
16. 70-வது சந்தோஷ் டிராபி கால்பந்து போட்டி 2017-ல் மேற்குவங்க அணி கோவா அணியை தோற்கடித்து வெற்றி பெற்றது.
17. இஸ்ரேலில் நடைபெற்ற லிநிங் - இஸ்ரேல் ஒபன் பேட்மிண்டன் போட்டி 2017-ல் 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் இந்தியாவின் பூர்வா மற்றும் வருண் வென்றுள்ளனர்.

18. ஆசிய ஹாக்கி சம்மேளத்தின் ஆண்டின் சிறந்த வீரர் விருதுக்கு இந்திய ஹாக்கி வீரர் எஸ்.வீ.சுனீலும் சிறந்த வளர்ந்து வரும் வீரர் விருதுக்கு மற்றொரு இந்தியர் ஹர்மான்பிரித்சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
19. ஷீயாவில் 2018-ல் நடைபெற உள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்க முதல் அணியாக பிரேசில் தகுதி பெற்றது
20. விசாகப்பட்டணத்தில் நடைபெற்ற தியோதர் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டத்தில் தமிழக அணி 42 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா - புளு அணியைத் தோற்கடித்தது
21. ஷார்ஜா மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் பங்கேற்ற ஸ்ரீநாத், ஸ்பெயினின் கிராண்ட் மாஸ்ட்ரான டேவிட் ஆண்டனை வீழ்த்தி கிராண்ட் மாஸ்டர் ஆனார்.